# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,892—1970 පෙබරවාරි 5 වැනි බ්‍රහස්පතින්දා—1970.2.5

14,892 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு பெப்புருவரி மாதம் 5 ந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV — உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறுகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 35 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | — | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விறபனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 37 | விதிச செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உளளூராடசி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல் கள் .. .. .. | 40 | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | 42 |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரபலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ආර්. පේ්‍රමදාස,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 6 ந் உ.

#### கட்டளை

1969 சனவரி 11 ந் திகதிய 14,836/1 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட வவுனியா மாவட்டத்து கடலோரப்பற்று காரியாதிகாரியின் பிரிவிலுள்ள கரிக்கட்டு மூலை தெற்குக் கிராமப் பிரதேசம், கரிக்கட்டு மூலை மேற்குக் கிராமப் பிரதேசம் ஆகியவை சம்பந்தமான கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றம், திரும்ப வரையறை, ஆகியவற்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான கருமங்களுக்கு இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட விதத்திலான ஏற்பாடு இத்தால் செய்யப்படுகின்றது.

#### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை அந்தப் புதிய கிராமப் பிரதேசம் பற்றிய, கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக்குக் கிராமச் சபையின் வழியுரிமையைப் பெறுவதாக இருக்கும்.

2. 1969 யூன் 30 ல் நடைமுறையிலிருக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட துணைவிதிகள் யாவும் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிலும், தொடர்ந்து நடைமுறையில் இருக்கவேண்டுவதுடன் அவை அப்புதிய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையால் ஆக்கப்பட்டனவாகக் கருதப்படவும் வேண்டும்.

3. 1969 யூன் 30 ல் பழைய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையின் சமுதாய நிதியின் வரவில் உள்ள தொகையில் அரைப்பங்கு 1969 யூலை 1 இல் புதிய கரிக்கட்டு மூலை மேற்குக் கிராமப் பிரதேசத்தின் சமுதாய நிதியிலும் மிகுதியான அரைப்பங்கு புதிய கரிக்கட்டு மூலை தெற்குக் கிராமப் பிரதேசத்தின் சமுதாய நிதியிலும் வரவுவைக்கப்படல் வேண்டும்.

4. 1969 யூன் 30 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயுள்ள அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த பணம் தவிர்ந்த ஏனைய அசைவுள்ள சொத்துக்கள் யாவும் 1969 யூலை 1 ந் திகதியிலிருந்து கரிக்கட்டு மூலை மேற்கு கிராமப் பிரதேசத்து கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டதாகக் கருதப்படல் வேண்டும்.

5. 1969 யூன் 30 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராம சபைக்கு உரித்தாகவுள்ள அல்லது அதன் ஆதிக்கத்தின்கீழிருந்த காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும் 1969 யூலை 1 இல் எப்புதிய கிராமப் பிரதேசத்தினுள் அக்காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்திருக்கின்றதோ அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவவொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விளம்பரதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ.

6. பழைய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையின் உரிமைகள், கடன்கள், பொறுப்புகள், கடப்பாடுகள் அனைத்தும், அவை புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை ஒவ்வொன்றுடனும் சம்பந்தப்பட்ட வரையில் 1969 யூலை 1 லிருந்து அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்பட்டிருப்பனவாகக் கருதப்படவேண்டும்.

7. பழைய கிராமச் சபையில் சேவையாற்றிய ஊழியர்களுக்கு இளைப் பாற்றிச்சம்பளம் வழங்குவதன் பொருட்டுச் செலுத்தப்பட்ட உதவு தொகைகள் சம்பந்தமான பழைய கிராமச் சபையின் பொறுப்பு கரிக்கட்டுமூலை மேற்கு, கரிக்கட்டுமூலை தெற்கு ஆகிய கிராமச் சபை களிடையே 1 : 1 ஆகிய விகிதாசாரத்தில் பிரிக்கப்படல் வேண்டும்.

8. இந்த அட்டவணையில்—

" புதிய கிராமப் பிரதேசம் " என்பது 1969 சனவரி 11 இன் 14,836/1 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையின் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள கரிக்கட்டுமூலை மேற்கு கிராமப் பிரதேசம் அல்லது கரிக்கட்டுமூலை தெற்குக் கிராமப் பிரதேசம் எனப் பொருள்படும், அத்துடன்

" பழைய கிராமப் பிரதேசம் " என்பது 1939 ஏப்பிரில் 5 இன் 8,444 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட பிரகடனத்தால் அமைக்கப்பட்ட கரிக்கட்டுமூலை தெற்கு கிராமப் பிரதேசமெனப் பொருள்படும்.

2—236/1—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2)ம் பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.

ஆர். ப்ரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு 1,
6.1.1970

### கட்டளை

1968 யூன் 30ந் திகதிய 14,808/8ம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட சிலாபம் மாவட்டத்திலுள்ள ஒத்தறபலாத்தை வடக்கு, ஒத்தறபலாத்தை தெற்கு ஆகிய கிராமப் பிரதேசங்களைத் திரும்ப வரையறை செய்வது சம்பந்தமான கட்டளைகளில் குறிப்பிடப்பட்ட பிரிவினையை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கு அவசியமான கருமங்களுக்கு இதன் கண்ணுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட விதத்திலான ஏற்பாடுகள் இத்தால் செய்யப்படுகின்றன.

### அட்டவணை

1. புதிய கிராமப் பிரதேசம் சம்பந்தப்பட்ட கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும் ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்தில் கிராமச் சபையும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையில் பின்னுரித்தாளியாக இருககும்.

2. 1968 திசெம்பர் 31 ல் நடைமுறையிலிருக்கும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்ட சகல துணைவிதிகளும் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டுவதுடன் அவை அந்தப் புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டனவாகவும் கருதப்படல் வேண்டும்.

3. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலிருக்கும் பணத் தொகையில் ஒன்பதில் ஐந்து பங்கு 1969 சனவரி 1ல் புதிய ஒத்தறபலாத்தை வடக்குக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலும் மீதியாயுள்ள ஒன்பதில் நான்கு பங்கு புதிய ஒத்தறபலாத்தை தெற்கு கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் சமுதாய நிதியிலும் வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

4. 1968 திசெம்பர் 31 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாயிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த பின் வரும் அசைவுள்ள சொத்துக்கள் 1969 சனவரி 1 இல் புதிய ஒத்தறபலாத்தை தெற்கு கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப் பட்டுள்ளனவாகக் கருதப்பட வேண்டுவதுடன் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் மீதியாயுள்ள அசைவுள்ள சொத்துக்கள் புதிய ஒத்தறபலாத்தை வடக்குக் கிராமப் பிரதேசத்துக்கு உரித்தாக்கப்படவும் வேண்டும்.

2 அலுமாரி மேசைகள்
1 எழுது மேசை
4 இழுப்பறைகளுடன்கூடிய 1 பேரேட்டு அலுமாரி
4 பெரிய தட்டுகள்
2 சிறிய தட்டுகள்
எழுதுகருவிகள் வைக்கும் 1 சிறிய றாக்கை
எழுதுகருவிகள் வைக்கும் 1 பெரிய றாக்கை
3 துளையிடுகருவிகள்
1 சிறிய பேனாக்கத்தி
1 கழிவுக்காகிதக் கூடை
1 கைபிடி வாங்கு
பிரதேசங்களைக்காட்டும் 1 தேசப்படம்
1 கேள்விப்பத்திரப் பெட்டி
1 மைக்கூடு
3 பிசின் போத்தல்கள்
1 பணிமனை மணி
50 அடி நீளமுள்ள 1 அளவை நாடா
15 கைபிடிக்கதிரைகள்
1 சாதாரணக்கதிரை
1 மேசைவிளக்கு
1 சிகிச்சா நிலைய மேசை
1 நெதுண் கதிரை
1 எனுமல் கோப்பை
2 ஆமைப்பூட்டுகள்
2 கொண்டிப்பட்டங்கள்
2 சாதாரண புகைப்படங்கள்
1 கால்வாங்கு
2 உருளை அடிமட்டங்கள்
1 24" சிங்களத் தட்டச்சுப்பொறி —ஒலிம்பியா
1 இரும்பலுமாரி வோக்கன்மோடல்
1 மர அலுமாரி (பிரசவமனை)
1 தட்டச்சுக்கதிரை
1 பிரதிப்பொறிதாங்கி
1 ஜெர்மன் சுவர்க்கடிகாரம்
1 பித்தளை அச்சுத்தாங்கி
1 10 ஆம் இலக்க கம்பிகட்டும் பொறி
1 அமைப்புவரைபடம் தீட்டும் உபகரண அணி
4 பாரக்கட்டிகள் (கண்ணாடி)
16 மண்வெட்டிகள் (முதலை)
3 குப்பைவாளிகள்
5 பிக்காசுகள்
1 கோடரி
2 குப்பைவாரிகள்
1 கம்பிச்சுருள்
6 மண்வெட்டிகள்
1 கோடரி
1 பிக்காசு

5. 1968 திசெம்பர் 31ன் பழைய கிராமப் பிரதேசத்திற்கு உரித்தாக இருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்து காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும் 1969 சனவரி 1ல் எப்புதிய கிராமப் பிரதேசத்தினுள் அக்காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்திருக்கின்றதோ, அக்கிராமச் சபைக்கு உரிமையாக்கப் பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

6. பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்குரிய உரிமைகள், கடன்கள் பொறுப்புகள், கடப்பாடுகள் யாவும், அவை புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றுடனும் சம்பந்தப்பட்டவரையில் 1969 சனவரி 1 லிருந்து அப்புதிய கிராமப்பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப் பட்டிருப்பனவாகக் கருதப்படல் வேண்டும்.

7. பழைய கிராம சபையில் சேவையாற்றிய ஊழியர்களுக்கு இளைப் பாற்றுச் சம்பளம் வழங்குவதற்காக கொடுக்கப்பட்ட உதவு நிதிகள் சம்பந்தமான பழைய கிராமச் சபையின் பொறுப்பு ஒத்தறபலாத்தை வடக்கு, ஒத்தறபலாத்தை தெற்கு ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளிடையே 5:4 ஆகிய வீதத்தில் பிரிக்கப்படல் வேண்டும்.

8. இந்த அட்டவணையில் :—

" புதிய கிராமப் பிரதேசம் " என்பது வேறு வகையில் விவரிக்கப்பட்டாலன்றி, 1968 யூன் 30ந் திகதிய 14,808/8 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையிற் காணப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஒத்தறபலாத்தை வடக்கு கிராமப் பிரதேசத்தையோ அன்றி ஒத்தறபலாத்தை தெற்குக் கிராமப் பிரதேசத்தையோ குறிக்கும். அத்துடன் "பழைய கிராமப் பிரதேசம் " என்பது புதிய கிராமப் பிரதேசங்களாக வருவதற்கு முன்பிருந்த ஒத்தறபலாத்தை கிராமப் பிரதேசத்தைக் குறிக்கும்.

2—236/2—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

### 13 ம் பிரிவின்படியான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க கிராமச் சபைகள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தருமலிங்கம் வாமதேவன் ஆகிய நான் திருகோணமலை மாவட்டத்து குடாக்கரை கிராமச் சபையின் 5 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. தீகொட கமகே நப்போசிங்கோ அவருடைய தெரிவின் பின்னர், சபைக்கு அறிவிக்காமல் அடுத்தடுத்து மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமாய் அறிந்து திருகோணமலை மாவட்டத்து குடாக்கரை கிராமச் சபையின் 5 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. தீகொட கமகே நப்போசிங்கோ இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து அங்கத்தவர் பதவியை விட்டு நீங்கியுள்ளார் என்று இத்தால் வெளிப்படுத்துகிறேன்.

த. வாமதேவன்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
திருகோணமலை.

உள்ளூராட்சி அமைச்சு,
திருகோணமலை அலுவலகம்,
திருகோணமலை,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 22 ந உ.

2–243—5.2.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,892

---

## களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம்

(267 ம் அதிகாரமாம்) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டத்தின் 2 ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் காலி மாவட்டத்திலுள்ள பறகொடைக் கிராமப் பிரதேசத்தின் கிராமச்சபையினால் நிறைவேற்றப்பட்ட பின்வரும் தீர்மானம் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றமையினால், அப்பிரிவின் (2) ம் உட்பிரிவின் பிரகாரம் பிரசுரிக்கப்படுகின்றது.

### தீர்மானம்

இத்தீர்மானம் கஜெற்றில் பிரசுரிக்கப்படும் திகதியிலிருந்து சபையின் நிருவாக எல்லைகளுக்குள் நடத்தப்படும் (கட்டளைச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ளவாறான) களியாட்டங்களுக்கான அனுமதிக்கட்டணங்கள்மீது (267 ம் அதிகாரமாம்) களியாட்டவரிக் கட்டளைச் சட்டத்தின் 2ம் பிரிவின் (1) ம் உட்பிரிவின் கீழ் இதன் கீழ் காட்டப்பட்டுள்ள விகிதங்களின் படியான ஒரு வரியை இச்சபை இத்தால் விதித்து அறவிடுகின்றது.

கட்டணத்தொகை

வரித்தொகை நீங்கலாக அனுமதிக்கட்டணம் :—

| | வரிவிகிதம் ரூ. ச. |
|---|---|
| (அ) 20 சதத்துக்குக் குறையாமலும் ஆனால் 50 சதத்துக்கு மேற்படாமலுமிருக்கு மிடத்து | 0 05 |
| (ஆ) 50 சதத்துக்கு மேற்படவும் ஆனால் 1.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து .. | 0 10 |
| (இ) 1.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 1.50 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 15 |
| (ஈ) 1.50 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 2.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 20 |
| (உ) 2.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 3.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 30 |
| (ஊ) 3.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 4.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 40 |
| (எ) 4.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 5.00 ரூபாவுக்கு மேற்படாமலுமிருக்குமிடத்து | 0 50 |
| (ஏ) 5.00 ரூபாவுக்கு மேற்படவும் ஆனால் 10.00 ரூபாவுக்கு மேற்படாமலுருக்குமிடத்து | 1 0 |
| (ஐ) 10.00 ரூபாவுக்கு மேற்படுமிடத்து— | |
| (1) முதல் 10 ரூபாவுக்கு .. .. | 1 0 |
| (2) மேலதிகமான ஒவ்வொரு 5 ரூபாவுக்கு அல்லது அதன் பகுதிக்கு .. | 1 0 |

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர், உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு 1, 1970 ம் ஆண்டு ஜனவரி மீ 12 ந உ.

2–228—5.2.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,892

---

# துணை விதிகள்

## அம்பலாந்தோட்டைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் அம்பலாந்தோட்டைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜி. குணவர்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 12 ந உ.

### துணைவிதி

அம்பலாந்தோட்டைப் பட்டின சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நியமத்துணைவிதிகளின் 19 ஆவது பாகத்தின் 6 ஆவது துணைவிதியின் நோக்கத்துக்கு, சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படவேண்டிய மலகூடக் கட்டணம் மலமகற்றப்படும் ஒவ்வொரு வாளிக்கும் 1 ரூபா 50 சதவீதமாக இருத்தல் வேண்டும்.

2–200—5.2.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,892

---

எல். டீ—பீ. 5/55

## தொடந்துவைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் தொடந்துவைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 12 ந உ.

### துணைவிதிகள்

#### மலகூடவேலை

1. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் XIX ஆம் பாகத்தின் 6 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்கு மாதாந்தம் சபைக்குச் செலுத்தப்பட வேண்டிய மலகூடக் கட்டணம் ஒன்றுக்கு மேற்பட்ட வாளி மலமகற்றுமிடத்து மேலதிக வாளி ஒவ்வொன்றுக்கும் ஐந்து ரூபா என்ற விகிதப்படியிருத்தல் வேண்டும்.

2. துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கட்டணங்கள், அத்தகைய கட்டணம் செலுத்தப்படவேண்டிய மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் பத்தாம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

2–201—5.2.70 ந திகதிய வர்த்தமானி இல. 14,892

## கிராமச் சபைகள் சட்டவாக்கச் சட்டம்

(257 ம் அதிகாரமாம்) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ம் பிரிவின் கீழ் கேகாலை மாவட்டத்திலுள்ள அத்துலுகமைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 12 ந் வ.

### துணைவிதிகள்

1. பின்வரும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(1) பதம்பண்ணிய மீன் அல்லது கருவாடு சேகரித்துவைத்திருத்தல்.
(2) மொத்த விற்பனையின் பொருட்டு பதனழியக்கூடிய உணவுப் பொருட்களையும் பண்டபதார்த்தங்களையும் சேகரித்துவைத்திருத்தல்.
(3) பசளை அல்லது செயற்கை உரம் உற்பத்தி செய்தல்.
(4) விளக்கிரி உற்பத்தி செய்தல்.
(5) சவர்க்காரம் உற்பத்தி செய்தல்.
(6) புகையிலை பதம்பண்ணலும் உலர்த்தலும்.
(7) தோல் பதனிடுஞ்சாலையொன்றுவைத்தல்.
(8) பாக்குகள் பக்குவம்பண்ணல்.
(9) இரத்தம் அல்லது கழிவிறைச்சி அவித்தல்.
(10) தோல்கள் அல்லது எலும்புகள் சேகரித்துவைத்திருத்தல்.
(11) இரப்பர் ஷீட்கள் அல்லது கிரேப் புகையூட்டலும் உற்பத்தி செய்தலும்.
(12) செயற்கை உரம் அல்லது செயற்கை உரம் தயாரிப்பதற்கு உபயோகிக்கப்படும் பொருட்களை மூன்று மூடைகளுக்கதிகமாகச் சேகரித்துவைத்திருத்தல்.
(13) சோடா உற்பத்தி செய்தல்.
(14) பலகைகள் பதம் பண்ணுதல்.
(15) மீனுக்கு பனிக்கட்டியிடல்.
(16) சுருட்டுகள் அல்லது பீடிகள் உற்பத்தி செய்தல்.
(17) கள் சேகரிக்கும் நிலையமொன்று வைத்தல்.
(18) பாணி அல்லது கருப்பட்டி உற்பத்தி செய்தல்.

2. பின்வரும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(1) தேயிலைத் தொழிற்சாலையொன்று வைத்தல்.
(2) கொப்பறா உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்தல்.
(3) கபக், கிரவல் அல்லது கருங்கல் அகழ்தல்.
(4) காரீயம் பக்குவம் பண்ணல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்.
(5) குழிதோண்டி முருகைக்கல் எடுத்தல்.
(6) அரிசி ஆலையொன்றுவைத்தல்.
(7) இயந்திர சாதனங்களைக்கொண்டு தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்.
(8) செக்கினால் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்.
(9) வெட்டுமரக்காலையொன்று வைத்தல்.
(10) தும்பு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்.
(11) பருத்திப் பஞ்சு சேகரித்துவைத்திருத்தல்.
(12) அச்சுக்கூடம் ஒன்றுவைத்தல்.
(13) தேங்காய்த் துருவல் உற்பத்தி செய்தல்.
(14) ஆபரணங்கள் உற்பத்தி செய்தல்.
(15) ஒக்ஸிஜின் உபயோகிக்கப்படும் கொல்லுலையொன்றுவைத்தல்.
(16) புல்லெண்ணெய் அல்லது கருவாத்தைலம் உற்பத்தி செய்தல்
(17) வைக்கோல் சேகரித்துவைத்திருத்தல்.
(18) கொல்லுலையொன்று வைத்தல்.
(19) மூச்சுப்பானங்கள் உற்பத்தி செய்தல்.
(20) கற்குழியொன்று வைத்திருத்தல்.
(21) அரிசி குத்தும் இயந்திரம் ஒன்றுவைத்தல்.
(22) மிளகாய் அல்லது கறிச்சரக்குகள் இயந்திரத்தால் அரைத்தல்.

3. பின்வரும் தொழில்கள் அபாயகரமானவையும், அருவருப்பானவையுமான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(1) தும்புக்குச் சாயம் ஏற்றுதல்.
(2) செங்கற்கள் அல்லது ஓடுகள் உற்பத்தி செய்தல்.
(3) பற்றறிகளுக்கு மின்னூட்டல்.
(4) சுண்ணாம்பு சுடுதல் சேகரித்துவைத்திருத்தல், பக்குவம் பண்ணல் அல்லது தகர்த்தல்.
(5) எண்ணெய் அல்லது வேறு எரிபொருள், நீராவி அல்லது மின்சாரத்தினால் இயக்கப்படும் இயந்திர சாதனம் உபயோகிக்கப்படும் தொழிற்சாலையொன்று வைத்தல்.

2–195—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

---

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257ம் அத்திகாரமாம்) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42ம் பிரிவின் கீழ் மொனறாகலை மாவட்டத்திலுள்ள பிந்தனை வடக்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபையினால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ம் உட்பிரிவினால் அன்னாருக்களிக்கப்பட்ட தத்துவ பலங்களைக் கொண்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயளாலர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
12.1.1970

### துணைவிதிகள்

### கிராமச் சந்தைகள்

1. கிராமச் சந்தை ஒவ்வொன்றிலுமிருந்து அரை மைல் ஆரத்தைக் கொண்ட ஒரு வட்டத்துள் இருக்கும் பிரதேசம் அச்சந்தையின் சந்தைப் பிரதேசமாகுமென இத்தால் பிரசித்தஞ் செய்யப்படுகிறது.

2. சபையினால் தாபிக்கப்பட்ட கிராமச் சந்தை எதிலுமுள்ள கடை, பீடம் அல்லது இடம் எதனையும் உபயோகிக்கும் அல்லது வசப்படுத்தும் ஒவ்வொருவரும் அத்தகைய உபயோகம் அல்லது வசப்படுத்தலுக்காக இதனோடுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ள விகிதங்களின்படியான ஒரு கட்டணம் செலுத்த வேண்டும்.

### திரிந்து விற்போர்

3. (1)தலைவரால் அதற்காக வழங்கப்பட்ட ஒரு உத்தரவுப்பத்திரத்தின் பேரிலன்றி எவரும் திரிந்து விற்பனை செய்யும் வியாபாரம் ஒன்றைத் தொடங்கவோ அல்லது நடத்தவோ கூடாது.

(2) (1) ம் பந்தியின்படி வழங்கப்பட்ட உத்தரவுப்பத்திரம் ஒவ்வொன்றும், முன்னரே தலைவரால் அளக்கப்பட்டாலன்றி அது வழங்கப்பட்ட வருடத்தின் திசம்பர் மாதம் முப்பத்தோராந் திகதியுடன் காலாவதியாகும்.

(3) இத்துணைவிதிகளில் :—

"தலைவர்" எனில் சபையின் தலைவர் எனப் பொருள்படும் ;

"சபை" எனில் மொனறாகலை மாவட்டத்திலுள்ள பிந்தனை வடக்குக் கிராமப் பிரதேசத்தின் கிராமச் சபை எனப்பொருள்படும்.

### அட்டவணை

| | | தினமொன்றுக்கான கட்டணம் ரூ. ச. |
|---|---|---|
| 1. | சந்தைக் கட்டடத்தினுள்ளிருக்கும் 42 சதுர அடிக்கு மேற்படாத கடை பீடம் அல்லது இடம் ஒன்றுக்கு .. | .50 |
| 2. | சந்தை வளவுக்குள்ளிருக்கும் அத்தகைய கடையொன்றுக்கு அதன் பரப்பு— | |
| (அ) | 42 சதுர அடிக்கு மேற்படாதிருக்கு மிடத்து .. | .35 |
| (ஆ) | 42 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாதுமிருக்குமிடத்து .. | .50 |
| 3. | சந்தை வளவினுள்ளிருக்கும் 100 சதுர அடிக்கு மேற்படாத கடை பீடம் அல்லது இடமொன்றுக்கு.. | .75 |
| 4. | வெளித்திடலில் உள்ள ஒரு கடை அல்லது இடத்துக்கு அதன் பரப்பு— | |
| (அ) | 9 சதுர அடிக்கு மேற்படாதிருக்கு மிடத்து .. | .05 |
| (ஆ) | 9 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 25 சதுர அடிக்கு மேற்படாதிருக்கு மிடத்து .. | .15 |
| (இ) | 25 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 50 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. | .30 |
| (ஈ) | 50 சதுர அடிக்கு மேற்படவும் ஆனால் 100 சதுர அடிக்கு மேற்படாதிருக்குமிடத்து .. | .60 |

2–194—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் மாத்தறை மாவட்டத்திலுள்ள மொறவக்க கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 12 ந் உ.

### அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதிகள்

மொறவக்க கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு 15.12.1967 ந் திகதிய 14,777 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள், அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சம்பந்தமான துணைவிதிகளில் இத்தால் பின்வருமாறு திருத்தப் படுகின்றன :—

1. பந்தி 1 ல், அதன் கண்ணுள்ள கடைசி விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

" மின்சக்தியினால் இயங்கும் அச்சகமொன்று வைத்திருத்தல்

கருங்கற் குழியொன்று வைத்தல்

மின்சார அல்லது வானொலிப்பெட்டிகள் திருத்தும் கடை அல்லது வானொலிப்பெட்டித் தொழிற்கூடமொன்று வைத்திருத்தல்

வெற்றுச்சாக்குகள் சேகரித்து வைத்திருத்தல்

டயர்களையும் ரியூப்களையும் வல்கனைஸ் செய்யும் நிறுவனமொன்று வைத்திருத்தல்

எவ்வகையான எண்ணெய்க் களஞ்சியமொன்றுவைத்திருத்தல்.

பைசிக்கிள் திருத்தும் கடையொன்று வைத்திருத்தல்.

தச்சுத் தொழிற்கூடமொன்று வைத்திருத்தல்.

தளபாடங்கள் செய்யும் நிறுவனமொன்று வைத்திருத்தல். "

2. பந்தி 2 ல், அதன் கண்ணுள்ள கடைசி விடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன் மூலமும் :—

" கையினால் இயக்கும் மரமரியும் இடங்கு அல்லது மரமரியும் ஆலையொன்று வைத்திருத்தல்.

இனிப்பு வகைகள் உற்பத்தி செய்தல். "

2–213—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

---

## மாநகர சபைகள் கட்டளைச் சட்டம்

(252 ம் அதிகாரமான) மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 147, 267 ஆகிய பிரிவுகளின் கீழ் மாத்தளை மாநகர சபையால் ஆக்கப்பட்டு உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்டனவும் அக்கட்டளைச்சட்டத்தின் 268ம் பிரிவின்படி மூதவையினாலும் பிரதிநிதிகள் சபையினாலும் உறுதிப் படுத்தப்பட்டனவுமான துணைவிதிகள்.

ஈ. ஜீ. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
12.1.1970

### துணைவிதிகள்

மாத்தளை நகர சபையால் ஆக்கப்பட்டு 1927, திசம்பர் 9 இன் 7,619ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்டனவும், 1962 ஒத்தோபர் 19 இன் 13,354 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதியினால் கடைசியாகத் திருத்தப்பட்டு மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 325 (1) ஆம் பிரிவின்படி, தொடர்ந்து மாநகரப் பிரதேசத்திலும் வழக்கில் வைக்கப் பட்டிருந்தனவுமான பொதுத் துணைவிதிகள், " சொற்பொருள் விளக்கம்" என்ற தலைப்பின் கீழ் " அருவருப்பானவையும் அபாயகரமானவையுமான தொழில்களின்" என்னும் வரையறையிலிருக்கும் " வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய், மண்ணெண்ணெ அல்லது கருவாடு சேகரித்து வைத்திருக்கும் ஆகாரப் பொருட்கடை ஒன்று வைத்தல் " என்னும் விடயத்துக்குப் பதிலாகப் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இதனால் மேலும் திருத்தப்படுகின்றன :—

"வெங்காயம், உருளைக்கிழங்கு, மிளகாய், மண்ணெண்ணெ அல்லது கருவாடு சேகரித்து வைத்திருக்கும் ஆகாரப்பொருட்கடையொன்று வைத்தல். "

உரம் உற்பத்தி செய்தல்

உரம் சேகரித்துவைத்தல்

கருங்கல், கபூக்கல், அல்லது கிரவல் தோண்டி எடுத்தல்

பாக்குகள் பதப்படுத்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்

செம்மறியாடுகளுக்கான அல்லது வெள்ளாடுகளுக்கான ஒரு கொட்டில் அல்லது காலை வைத்திருத்தல்.

கொங்கிறீற் ஓடுகள், கொங்கிறீற் குழாய்கள், அல்லது வேறு கொங்கிறீற் பொருட்கள் உற்பத்தி செயதல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்

10 அந்தருக்கதிகமான அளவில் வெங்காயம் சேகரித்துவைத்திருத்தல்

10 அந்தருக்கதிகமான அளவில் உருளைக்கிழங்கு சேகரித்துவைத்திருத்தல்

சீமந்து சேகரித்துவைத்திருத்தல்

பழைய உலோகம் சேகரித்துவைத்திருத்தல்

இரும்புப்பெட்டிகள் உற்பத்தி செய்தல்

பசைப்பாணி உற்பத்தி செய்தல்

கொக்கோ சேகரித்துவைத்திருத்தல்

சவப்பெட்டிகள் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்

தளபாடங்கள் உற்பத்தி செய்தல்

பிரம்புப் பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைதிருத்தல்

மிருகத்தீனிக்கடையொன்று வைத்தல்

இயந்திர சாதனங்கள் கொண்டு எலும்புகள் அரைத்தல்

5 அந்தருக்கதிகமான அளவில் கடலையும் பருப்பும் சேகரித்து வைத்திருத்தல்

கொப்பரா உற்பததி செய்தல்

தும்பு உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்

ஏற்றுமதி செய்வதற்காகத் தேயிலை சேகரித்து வைத்திருத்தல்

மெதலின்சேர் மதுசாரம் சேகரித்துவைத்திருத்தல்

வர்ணப்பசை அல்லது மினுக்குப்பாணி சேகரித்துவைத்திருத்தல்

மிட்டாய்வகை உற்பத்தி செயதல்

25க்கு அதிகமான உபயோகித்த தயர்களை அல்லது தியூப்புகளைச் சேகரித்து வைத்திருத்தல்

தேயிலைப்பெட்டிகள் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்

உபயோகித்த துணிமணிகள் சேகரித்துவைத்திருத்தல்

சுருட்டுகள் உற்பத்தி செய்தல்

ஐந்து கலன்களுக்கு அதிகமான வினாகிரி சேகரித்துவைத்திருத்தல்

15 குரோஸ்களுக்கதிகமாகத் தீப்பெட்டிகள் சேகரித்துவைத்திருத்தல்

புதிய உலோகம் சேகரித்துவைத்திருத்தல்

வாடகைக்கு விடுதற்காக விளக்குகள் சேகரித்துவைத்திருத்தல்

மின்சார வேலைத்தளம் ஒன்றுவைத்தல்

நோய்பரவாற்றடை மருந்துகள் சேகரித்துவைத்தல்

கோழிக்கடை ஒன்று வைத்தல்

கவர்க்காரம் உற்பத்தி செய்தல்

மின்முலாமிடும் அல்லது குருமம் முலாமிடும் அல்லது தங்கமுலாமிடும் அல்லது வெள்ளிமுலாமிடும் அல்லது செப்புமுலாமிடும் நிறுவனம் ஒன்றுவைத்தல்

25 க்கு அதிகமான தயர்களையும் தியூப்களையும் விற்பனைக்காகச் சேகரித்து வைத்திருத்தல்

வைக்கோல் அல்லது உலர்புல் சேகரித்துவைத்திருத்தல்

தோல்பதனிடுஞ்சாலை ஒன்று வைத்தல்

2–218—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

எஸ்டி—பி 3/53

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

1961 இன் 60 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (257ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் மாத்தறை மாவட்டத்திலுள்ள பெரலபனுத்தறைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

ஈ. ஜி. குணவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
உள்ளூராட்சி அமைச்சு.

கொழும்பு,
12.1.1970.

**துணைவிதி**

தண்ணீர்ச் சேவை சம்பந்தமான நியமத்துணைவிதிகள், மாத்தறை மாவட்டத்திலுள்ள பெரலபனுத்தறைக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு அவை பொருத்தமுடையனவாக இருக்கும்வரையில், 27 ஆவது துணைவிதியை உடனடுத்துப் பின்வரும் புதிய துணைவிதிகளை இவ்வதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :—

" 27 அ. சபையினால் நிறுவப்படிருக்கும் தண்ணீர்ச் சேவையிலிருந்து தனிப்பட்ட இணைப்பொன்று வழங்கப்பட்டுள்ள மனைத்தலம் எதனதும் உடைமையாளர் அல்லது ஆட்சியாளர் :—

(1) வதியும் நோக்கத்துக்கு உபயோகிக்கப்படும் மனைத்தலத்தைப் பொறுத்தவரை வருடமொன்றுக்கு 18 ரூபாவும்,

(2) வியாபார நோக்கத்துக்கு உபயோகிக்கப்படும் மனைத்தலத்தைப் பொறுத்தவரை வருடமொன்றுக்கு 24 ரூபாவும் செலுத்த வேண்டும்."

2–212—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

# உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூராதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி.
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
19.1.1970.

**அட்டவணை**

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| .. | **மாத்தறை மாவட்டம்** |
| .. | **ஹக்மன–வலகட கிராமச் சபை** |
| 4 .. | லியன ஆரச்சி சார்லிஸ் |
| .. | **பதுளை மாவட்டம்** |
| .. | **ஊவாபரணகம கிராமச் சபை** |
| 7 .. | நிஸ்ஸங்க முதியன்செலாகே புஞ்சிபண்டா |

2–253—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

## உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள், அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிப்பிட்டுள்ள உள்ளூராதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ஆம் அத்தியாயமான) உள்ளூராதிகார சபைகள் தேர்தற் கட்ட ச் சட்டத்தின் 36 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
19.1.1970.

**அட்டவணை**

| வட்டார இல. | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | **நுவரேலியா மாவட்டம்** |
| .. | **பல்லேபனே கிராமச் சபை** |
| 16 .. | மீகஸ்கும்புரே கெதர பொடி அப்புகாமி |
| | **ஹம்பாந்தோட்டை மாவட்டம்** |
| | **நெட்போல்பிட்டிய கிராமச் சபை** |
| 21 .. | வீரசேகர மலவி ஆரச்சிகே தொன் தியோனிஸ் |

2–252—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

## உள்ளூர்ச் சபைகளது தேர்தல்களின் முடிவுகள் தொடர்பான புள்ளிவிவரங்கள்

1969 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில் நடைபெற்ற தேர்தல்களது முடிவுகளின் கீழ்க்காணும் விவரங்கள் பொதுத் தகவலுக்காகப் பிரசுரிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
25.1.70.

**யாழ்ப்பாண மாவட்டம்**

**உள்ளூராட்சி அதிகார சபையின் பெயர்—காங்கேசன்துறை பட்டின சபை—தேர்தல் திகதி—7.12.1969**

| வட்டாரத்தின் இலக்கமும் பெயரும் | தேர்தல் இடாப்பில் உள்ள வாக்காளர் தொகை | அபேட்சகரின் பெயர் | ஒதுக்கப்பட்ட அடையாளம் | அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் உட்பட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | 770 | க. ஜெயபாலசிங்கம் | கண் | 538 | 1 | 676 |
| | | செ. சோதிராசா | சேவல் | 137 | | |
| 2 | 901 | வ. சதாசிவம் | சேவல் | 378 | 2 | 706 |
| | | சி. தேவராசா | தராசு | 326 | | |
| 4 | 1,396 | சி. நாகரத்தினம் | கண் | 559 | 6 | 1,172 |
| | | தி. வன்னியசிங்கம் | குடை | 470 | | |
| | | வை. வேலாயுதம்பிள்ளை | சேவல் | 137 | | |
| 5 | 873 | வி. இரத்தினராசா | தராசு | 322 | — | 636 |
| | | சி. கணபதிப்பிள்ளை | கண் | 314 | | |
| 6 | 1,061 | ஞா. பேரின்பம் | கண் | 366 | 8 | 965 |
| | | செ. மருசலீன் | கப்பல் | 301 | | |
| | | சி. இராமநாதன் | மணி | 290 | | |

## யாழ்ப்பாண மாவட்டம்

### உள்ளூராட்சி அதிகார சபையின் பெயர்—அராலி கிராம சபை—இடைத் தேர்தல் திகதி—29.12.1969

| வட்டாரத்தின் இலக்கமும் பெயரும் | தேர்தல் இடாப்பில் உள்ள வாக்காளர் தொகை | அபேட்சகரின் பெயர்<br>ஊனே | ஒதுக்கப்பட்ட அடையாளம் | அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் உட்பட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 8 | 318 | மா. நடராசா | சேவல் | 103 | 4 | 182 |
| | | க. செல்லையா | தராசு | 75 | | |

### சுளிபுரம் கிராம சபை—இடைத் தேர்தல்—திகதி—29.12.1969

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 2 | 1,140 | வ. அமிர்தலிங்கம் | விளக்கு | 414 | 3 | 472 |
| | | க. தர்மலிங்கம் | தராசு | 55 | | |

## அம்பாரை மாவட்டம்

### உள்ளூர் அதிகார சபையின் பெயர்—கல்முனை பட்டின சபை—தேர்தல் திகதி—22.12.1969

| வட்டாரத்தின் இலக்கமும் பெயரும் | தேர்தல் இடாப்பில் உள்ள வாக்காளர் தொகை | அபேட்சகரின் பெயர் | ஒதுக்கப்பட்ட அடையாளம் | அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் உட்பட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | ·871 | வன்னியசிங்கம், கனகசூரியம் | சேவல் | 403 | 3 | 664 |
| | | முண்டாப்போடி, தம்பிப்பிள்ளை | பூ | 172 | | |
| | | விஜேசூரிய, எட்வின் | விளக்கு | 86 | | |
| 2 | 1,205 | தம்பிப்பிள்ளை, சௌந்தரி | சேவல் | 627 | | |
| | | நாகமணி, மயில்வாகனம் | குடை | 404 | 13 | 1,047 |
| | | தம்பிப்பிள்ளை, கோபாலரெத்தினம் | விளக்கு | 03 | | |
| 3 | 1,698 | அகமதுலெவ்வை, எஸ். | யானை | 641 | 22 | 1,288 |
| | | மீராலெவ்வை ஆதம்வாவா | கை | 625 | | |
| 4 | 1,305 | குளந்தைமரைக்கார், காசீம்வாவா | கை | 690 | 17 | 1,136 |
| | | இஸ்மாயில், எஸ். எம். | யானை | 429 | | |
| 5 | 1,461 | ஆதம்வாவா, அகமதுலெவ்வை | கை | 677 | 19 | 1,273 |
| | | ஹமீத், எம். எஸ். | யானை | 577 | | |
| 6 | 1,213 | முகையதீன்வாவா, ஏ. | யானை | 478 | 22 | 1,013 |
| | | ஆதம்வாவா, சீனிமுகம்மது | தராசு | 411 | | |
| | | யூனுஸ், எம். எம். | குடை | 102 | | |
| 7 | 1,009 | அகமது, முகம்மது காசீம் | கை | 582 | 16 | 764 |
| | | ஹமீத், எம். எஸ். | யானை | 166 | | |

## திருக்கோணமலை மாவட்டம்

### உள்ளூர் ஆட்சிச் சபையின் பெயர்—கிண்ணியா பட்டின சபை—தேர்தல் நடந்த திகதி—18.12.1969

| வட்டாரத்தின் பெயரும் இலக்கமும் | தேருனர் இடாப்பில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை | வேட்பாளர்களின் பெயர்கள் | அளிக்கப்பட்ட சின்னம் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் உட்பட அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 725 | ஆமாத்து காலிதீன் | யானை | 426 | 3 | 683 |
| | | முகம்மது மெய்யதீன் அப்துல் ஜபார் | கை | 254 | | |
| 2 | 768 | சீனிவாப்பு அப்துல் முத்தலிபு | யானை | 409 | 11 | 710 |
| | | எக்கீன் முகம்மது மெய்யதீன் | கை | 290 | | |
| 3 | 973 | பக்கீர்தம்பி அப்துல் கரீம் | கை | 471 | 4 | 910 |
| | | முகம்மது முதார் அலி சகுபர் | யானை | 445 | | |
| 4 | 792 | அப்துல் லத்தீவ் அப்துல் மஜீத் | கை | 522 | 9 | 698 |
| | | முகம்மது உசன் காஜீ அப்துல் றெகுமான் | யானை | 167 | | |
| 5 | 923 | முகம்மதுத்தம்பி ஏக்கூப் | கை | 478 | 20 | 863 |
| | | முகம்மது சரிபு சதக்குலெப்பை | யானை | 365 | | |
| 6 | 878 | அப்துல் சமது காஜியார் முகம்மது கனிபா | யானை | 430 | 22 | 834 |
| | | முகம்மது கரீம் அப்துல் சமது | கை | 382 | | |
| 7 | 455 | முகம்மது எகுத்தார் காஜியார் மகறூப் | யானை | 318 | 6 | 420 |
| | | ரெம்லான் முகம்மது சக்கரியா | கை | 96 | | |

### திருக்கோணமலே மாவட்டம்

**உள்ளூர் ஆட்சிச் சபையின் பெயர்—தெகிவத்த கிராமச் சபை—தேர்தல் நடந்த திகதி—7.12.1969**

| வட்டாரத்தின் பெயரும் இலக்கமும் | தேருனர் இடாப்பில் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை | வேட்பாளர்களின் பெயர்கள் | அளிக்கப்பட்ட சின்னம் | அளிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | நிராகரிக்கப்பட்ட வாக்குகள் உட்பட அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் |
|---|---|---|---|---|---|---|
| 3 | 432 | கேவாகன்பெல்லகே கிரினேலிஸ் | தராசு | 130 | 4 | 329 |
| | | சேமபால, தடையக்கார தெனகே | மணி | 93 | | |
| | | கோவிஸ், கே. ஜீ. | ஏணி | 52 | | |
| | | சுவாரிஸ், கொடிப்பிலி | நாற்காலி | 42 | | |
| | | விலியம் சில்வா, எதிரிசூரிய | குடை | 08 | | |

2–205—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

---

# நானுவித அறிவித்தல்கள்

## கிளிநொச்சி பட்டின சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர் பற்றிய சட்டம் (அத்தியாயம் 272) 7ம் பிரிவின் தாற்பரியபடி இதன்கீழ்க்காணும் அட்டவணையில் காண்பவரிடமிருந்து 1970 ம் ஆண்டுகுகு இறைச்சி கடைக்கு உத்தரவுப் பத்திரத்திற்கு விண்ணப்பம் கிடைக்கப்பட்டிருக்கிறது.

இப்பட்டண சபை இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் உத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுபபுக்கான காரணங்களே இந்த அறிவித்தல் கெசற்றில் பிரசுரிக்கப்பட்ட திகதியிலிருந்து பதின்நான்கு நாட்களுக்கிடையில் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளுகினறேன்.

**அட்டவணை**

| | விண்ணப்பகாரரின் பெயர் | வியாபாரத்தின் தன்மை | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|---|
| 1. | கமீது அப்துல் கபூர் | ஆட்டிறைச்சி 1 ம் இலக்க கடை | கிளிநொச்சி |
| 2. | இ. ஆதம்பாவா | ஆட்டிறைச்சிக்கடை இல. 2 | கிளிநொச்சி |
| 3. | கச்சுமுகம்மது முகம்மது சுபையிர் | மாட்டிறைச்சிக்கடை இல. 2 | கிளிநொச்சி |
| 4. | பாவாசாகிப் முகம்மது யூசுப் | மாட்டிறைச்சிக் கடை | பரந்தன் |

க. ச. கந்தையா,
தலேவர்,
பட்டணசபை, கிளிநொச்சி.

பட்டண சபை அலுவலகம்,
கிளிநொச்சி, 1970 ம் ஆண்டு ஜனவரி மீ 24 ந் உ.

2–210—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

---

## காங்கேசன்துறை பட்டின சபை

### இறைச்சிக்காரர் கட்டளேச் சட்டம்

(272 ஆம் அத்தியாயமான) இறைச்சிக்காரர் கட்டளேச் சட்டத்தின் 27 (1)–ம் பிரிவின் கீழ், காங்கேசனதுறை பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளேச் சட்டத்தின் 27 (1)–ம் பிரிவின் கீழ் தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் உள்ளூராட்சி அமைச்சரால் அஙகீகரிக்கப்பட்ட ஒழுங்கு விதி.

ஆர். பிரேமதாச,
உள்ளூராட்சி அமைச்சர்.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஜனவரி மீ 13 ந் உ.

### ஒழுங்குவிதி

1955 டிசம்பர் 23 இன் 10,872 ம் இலக்க கசெற்றிற் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள், 11 (1) ம் ஒழுங்குவிதியில், " தலேக்கு 1.50 ரூபா " என்பதற்குப் பதிலாக " தலேக்கு 2.50 ரூபா " என்பதையும் " தலேக்கு -/75 சதம் " என்பதற்குப் பதிலாக " தலேக்கு 1.75 ரூபா " என்பதையும் சேர்ப்பதன் மூலமும் இதனுல் திருத்தப்படுகின்றன.

2–199—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

---

## அக்கரைப்பற்று மத்திய கிராம சபை

### கசாப்புக் கடைக்காரர்பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர்பற்றிய 1947 ம், ஆண்டின், 44 ம், இலக்கச் சட்டத்தின் 7 ம், பிரிவின்படி கீழ்க்காணும் அட்டவணேயில் காண்போர்களிடமிருந்து அவர்களின் பெயர்களுக்கு நேரே விபரிக்கப்பட்டுள்ள இடங்களில் 1970 ம், ஆண்டுக்குக் கசாப்புக் கடைகள் நடாத்துவதற்கு என்னிடம் உத்தரவுப்பத்திரம் கோரி விண்ணப்பஙகள் கிடைத்துள்ளனவென்பதை இத்தால் விளம்பரப்படுத்துகின்றேன்.

அக்கரைப்பற்று மத்திய கிராமசபைப் பகுதியில் வாழ்பவர்கள் எவரேனும் இவ்வுத்தரவுப் பத்திரம் கொடுப்பதை மறுக்க விரும்பினுல், அவர்கள் இவ்வர்த்தமானி விளம்பரத்திகதியிலிருந்து பதினுன்கு (14) தினங்கட்குள் தமது மறுப்புக்களேக் காரணங்கள் காட்டி இரு பிரதிகளில் எழுத்துமூலம் எமக்குச் சமர்ப்பிக்கவேண்டும்.

**அட்டவணை**

| | விண்ணப்பக்காரரின் பெயரும் விலாசமும் | கடைநாத்தவிருக்குமிடம் | வியாபாரத்தின் தன்மை |
|---|---|---|---|
| 1. | அபூபக்கர் முகம்மதுசாலி 6 ம், குறிச்சி, அக்கரைப்பற்று | அக்கரைப்பற்று 1 ம், குறிச்சி அக்கரைப்பற்று–மட்டக்களப்பு பிரதான வீதியில் | மாட்டிறைச்சிக்கடை |
| 2. | அபூபக்கர் முகம்மது சாலி 6 ம், குறிச்சி, அக்கரைப்பற்று | அக்கரைப்பற்று 2/3 ம், குறிச்சிகடகமைவாக, அக்கரைப்பற்று மட்டக்களப்பு பிரதான வீதியில் | மாட்டிறைச்சிக்கடை |
| 3. | அபூபக்கர் முகமதனிபா 6 ம், குறிச்சி, அக்கரைப்பற்று | அக்கரைப்பற்று 4 ம், 5 ம், 6 ம், குறிச்சிகட்கமைவாக புதுப்பள்ளியடியில் | மாட்டிறைச்சிக்கடை |
| 4. | எஸ். ஈ. எம். ராவுத்தர், 1 ம், குறிச்சி, அக்கரைப்பற்று | அக்கரைப்பற்றுச் சந்தை மீன்சந்தைக் கருகாமையில் | ஆட்டிறைச்சிக்கடை |

கிராமசபைக் காரியாலயம்,
அக்கரைப்பற்று மத்தி,
அக்கரைப்பற்று, 1970 ம் ஆண்டு தை மீ 25 ந் உ.

அன்ரன் அல்பிரட்,
நிருவாக அதிகாரி,
அக்கரைப்பற்று மத்திய கிராமசபை.

2–216—5.2.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,892

## குறிஞ்சாக்கேணி கிராமச் சபை

### இறைச்சிக்காரர் பற்றிய சட்ட அறிவித்தல்

இறைச்சிக்காரர்பற்றிய 1947 ம் ஆண்டின் 44 ம் இலக்க சட்டத்தின் 7 ம் பிரிவின் தாற்பரியப்படி பின்வரும் அட்டவணையிற் சொல்லப் பட்டவரிடமிருந்து 1970 ம் ஆண்டிற்கு புச்சர் லைசன்ஸ் தரும்படி விண்ணப்பம் கிடைத்திருக்கின்றது.

இக்கிராமச் சபைக்குட்பட்ட இடப்பரப்பில் வசிப்போர் எவரேனும் குறிக்கும் லைசன்ஸ் கொடுப்பதை மறுக்க விரும்பினுல் மறுப்பிற்கான காரணங்களை 14 நாட்களுக்குள் இணைப்பிரதிகளாக எமக்கு அனுப்பிவைக்கும்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எம். மெய்தீன்,
தலைவர், குறிஞ்சாக்கேணி கிராமச் சபை.

கிண்ணியா, 1970 ம் ஆண்டு ஜனவரி மீ 24 ந் உ.

அட்டவணை

| விண்ணப்பக்காரர் | விலாசம் | வியாபாரம் செய்யும் இடம் |
|---|---|---|
| 1. ஜனப் அப்துல்கமீது செயினுதீன் | 4ம் வட்டாரம் குறிஞ்சாக்கேணி | குறிஞ்சாக்கேணி முனையச்சேனை காக்காமுனை |

2–198—5.2.70 ம் திகதிய வர்த்தமானி இல. 14,892

**அறிவித்தல்களும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல் பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல்** வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்றல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின்கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறெக்ரறல் " கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்து சேரவேண்டும்.

13. **சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—**

| **அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு)** | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) சதம் |
|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| சனவரி .. .. | 2.1.70 | வெள்ளி .. | 26.12.69 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 9.1.70 | வெள்ளி .. | 2. 1.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 16.1.70 | வெள்ளி .. | 8. 1.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 23.1.70 | வெள்ளி .. | 16. 1.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 29.1.70 | வியாழன் .. | 21. 1.70 | புதன் | ந. ப. | 12.00 |
| பெப்புருவரி .. | 5.2.70 | வியாழன் .. | 28. 1.70 | புதன் | பி. ப. | 3.30 |
| | 13.2.70 | வெள்ளி .. | 5. 2.70 | வியாழன் | ந. ப. | 12.00 |
| | 20.2.70 | வெள்ளி .. | 13. 2.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 27.2.70 | வெள்ளி .. | 20. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| மாச்சு .. .. | 5.3.70 | வியாழன் .. | 27. 2.70 | வெள்ளி | ந. ப. | 12.00 |
| | 13.3.70 | வெள்ளி .. | 5. 3.70 | வியாழன் | பி. ப. | 3.30 |
| | 20.3.70 | வெள்ளி .. | 13. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |
| | 26.3.70 | வியாழன் .. | 20. 3.70 | வெள்ளி | பி. ப. | 3.30 |

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகன்

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ஆம் ஆண்டு திசெம்பர் மீ 12 ஆந் உ.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.